Source: *Tamil Murasu,* p2
Date: 8 December 2022

பட்டமேற்படிப்பு கட்டணமுறை மாறுகிறது: உதவித்தொகை பெறுவதை நிறுத்த முடிவு

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் (என்யுஎஸ்) எல்லாவித பட்டமேற்படிப்புகளுக்கான கட்டணங்களும் இவ்வாண்டு இறுதிக்குள் சுய-நிதிமுறைக்கு முழுமையாக மாற உள்ளதாகவும் அரசாங்க உதவித் தொகை பெறுவது நிறுத்தப்பட இருப்பதாகவும் என்யுஎஸ் தலைவர் டான் எங் சை தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் குழு விவாதம் ஒன்றில் பங்கேற்று அவர் பேசினார்.

கல்விக் கட்டணத்தை வெளி நாட்டுக் கல்வி நிலையங்களோடு ஒப்பிடத்தக்க அளவுக்கு வைத்திருப்பது அதன் பொருள் என்றும் இது பின்னர் வருவாய் தரக்கூடிய ஒன்றாக மாறும் என்றும் குறிப்பிட்டார்.

டைம்ஸ் உயர் கல்வி நிலையத்தின் கருத்தரங்கில் பங்கேற்ற அவரிடம் நிதி நிலைத்தன்மையை என்யுஎஸ் எவ்வாறு சமாளிக்கிறது என்று கேள்வி எழுப்பப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக கிட்டத்தட்ட எல்லாவித பட்டமேற்படிப்புகளுக்குமான கல்விக் கட்டணத்திற்கான அரசாங்க நிதி உதவியைப் பெறுவது நிறுத்தப்பட்டு வருகிறது. ஆண்டிறுதிக்குள் அது முழுமை பெறும் என்றார் பேராசிரியர் டான்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.